சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 01.08.2025
வா.சா.1 – மூகாம்பிகை W/o வேலாயுதம்
MCOP No.26/2022 :
(சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு கூடுதல் ஆவணம் தாக்கல் செய்கிறார்)
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
முதல் விசாரணை :

நானும், என் தாயார் சாவித்திரியும் MCOP 26/2022 வழக்கினை தாக்கல் செய்திருக்கிறோம் ஏற்கனவே எனது தரப்பில் 1 முதல் 9 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்திருக்கிறேன். தற்போது நான் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதன்படி என் தகப்பனரான மெய்யப்பன் என்கிற செல்வமணி விபத்தில் காலமானதை வைத்து அவருக்கு உடற்கூராய்வு மேற்கொண்டதற்கான உடற்கூராய்வு அறிக்கையை நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்கிறேன் மேற்படி ஆவணம் ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :

நான் வழக்கிற்காக என் தந்தையார் வயதை 60 என்று குறைத்து கூறியுள்ளேன் என்றும் உண்மையில் என் தந்தைக்கு 80 வயதுக்கு மேல் இருக்கும் என்றால் சரியல்ல. என் தந்தையின் உண்மையான வயதை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் சரியல்ல, உடற்கூராய்வு அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறேன். என் தந்தையின் ஆதாரையோ, ஓட்டுநர் உரிமைத்தையோ தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA
Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.08.01 19:42:04 +0530

Sub Judge

Melur